# சாட் ஜிபிடியும் அவற்றின் பயன்பாடுகளும்

*ச. தமீம் அன்சாரி*
முனைவர்ப்பட்ட ஆய்வாளர்
அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
https://doi.org/10.5281/zenodo.15526497

**ஆய்வுச்சுருக்கம்**
*தொழில்நுட்பத்தில் நாடுகள் எதைநோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது. அறிவியலின் உச்ச நிலையும் கணினிகளின் மேம்பட்ட வளர்ச்சியினையும் கொண்டு செயல்படுகிறது. செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி வியப்பளிக்கிறது. அதன் வகையில் செயற்கை நுண்ணறிவான சாட் ஜிபிடி* (chatGpt) *எவ்வாறெல்லாம் மக்களுக்கு பயனளிக்கக்கூடிய வகையில் செயல்படுகிறது. தமிழ், மொழிபெயர்ப்பு உள்ளிட்ட பன்முகப் பார்வையில் சாட் ஜிபிடியின் நிலை குறித்தும் மேம்பட்ட வளர்ச்சியினை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.*

**முன்னுரை**

அறிவியலில் நாம் வளர்ந்து வந்தாலும் அதன் வேகம் சற்று குறைவாகவே இருக்கிறது. இருப்பினும் செயற்கை நுண்ணறிவான சாட் ஜிபிடி மக்களுக்கு பயன்படும் விதங்களும் அவற்றின் மேம்பட்ட வளர்ச்சியினை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்த வேண்டும் என்றும் தற்போது தமிழ் உள்ளிட்ட பல்துறைகளில் செயல்பாடு குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கணினியின் தலைமுறைகள்**

| வ.எண் | தலைமுறைகள் | காலம் |
|---|---|---|
| 1. | முதல்தலைமுறை (வெற்றிடக் குழாய்கள்) | 1940 - 1956 |
| 2. | இரண்டாம் தலைமுறை (டிரான்சிஸ்டர்) | 1956 - 1964 |
| 3. | மூன்றாம் தலைமுறை (ஒருங்கமைவுச் சுற்றுகள்) | 1964 - 1971 |
| 4. | நான்காம் தலைமுறை (நுண்செயலி) | 1971 - 1981 |
| 5. | ஐந்தாம் தலைமுறை (செயற்கை நுண்ணறிவு) | 1981 - இன்றுவரை |
| 6. | ஆறாம் தலைமுறை (உறுப்பு நுண்ணறிவு) | 2023 முதல் (நன்றி, சன்நியூஸ், 09.03.2023) |

**செயற்கை நுண்ணறிவு (AI)**

செயற்கைநுண்ணறிவு என்பது இயந்திரக் கற்றல். மனிதனைப் போலவே தானாகச் சிந்தித்து செயல்படும் வகையில் செயற்கை நுண்ணறிவுப் பயன்படுகிறது. நாம் கொடுக்கும்

உள்ளீடுக்கு ஏற்றவாறு நுண்ணிய தகவல்களைக் கொடுக்கும் தொழில் நுட்பமாகும்.

**செயற்கை நுண்ணறிவின் வகைகள்**

இவை திறன் சார்ந்த செயற்கை நுண்ணறிவு வகைகள்:

1. குறுகிய செயற்கை நுண்ணறிவு (Narrow Artificial Intelligence).
2. பொது செயற்கை நுண்ணறிவு (Generative Artificial Intelligence)
3. சூப்பர் செயற்கை நுண்ணறிவு (Super Artificial Intelligence)

இது போன்ற படிநிலையில் செயற்கை நுண்ணறிவை வகைப்படுத்தலாம்.

**செயற்கை நுண்ணறிவின் கருவிகள்**

1. சாட் ஜிபிடி (chatGPT)
2. டீப்சீக் ஆர் 1 (DeepSeek),
3. குவென் 2.5 மேக்ஸ்
4. க்ரோக் பீட்டா (Goe Beta)
5. கூகிள் ஜெமினி (google Gemini)
6. பெர்பெலஸ்சிட்டி (Perplexity)
7. கோபைலட் (Copilot)

போன்ற பலவகையான செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் வந்து கொண்டே இருக்கின்றன. செயற்கை நுண்ணறிவின் கருவிகள் பல இருப்பினும் அவற்றில் சாட் ஜிபிடியை மட்டும் விரிவாகக் காண்போம்.

**சாட் ஜீபிடி (chatGPT)**

- சாட் ஜிபிடி (chatGPT), ஓபன் ஏ.ஐ (open AI) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவாகும்.
- கணினி மனிதனிடம் உரையாடுவது போன்றும் மனிதன் கணினியிடம் உரையாடுவது போன்றும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கூகுள் அசிஸ்டண்ட் (Google Assistants) என்பது சாட் ஜிபிட்டி வருகையால் கூகுள் பார்ட் (Googl Bard) ஆக மாற்றியமைத்தது. பிறகு ஆறே மாதத்தில் தன் பெயரை ஜெமினி (Gemini) ஆக மாற்றியமைக்கப்பட்டது.
- சாட் ஜிபிடி அறிமுகமான இரண்டே மாதத்தில் பத்துக்கோடி பயனாளர்களை ஈர்த்தது.
- சாட் ஜிபிடியில் நமக்குத் தேவையான தகவலை மிக நுணுக்கமாகக் கேட்பதால் தெளிவானப் பதிலையும் கொடுக்கிறது
- ஜிபிடி - ஜெனரேட்டிவ் ஃபிரி-டிரய்ன்டு டிரான்ஸ்ஃபார்மர் (GPT & Generative Pre&trained Transformed) *(நன்றி: புதிய தலைமுறை)*
- இதை யார் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும்.
- சாட் ஜிபிடி-1, சாட் ஜிபிடி-2, சாட் ஜிபிடி-3, சாட் ஜிபிடி-3.5 வரை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- சாட் ஜிபிடி-4 என்பது மேம்பட்ட தரவுகளைக் கொடுக்கும் கட்டணத்துடன் கூடிய இயங்குதளமாக இருக்கிறது.

**சாட் ஜிபிடியில் திருக்குறள்**

சாட் ஜிபிடியில் திருக்குறளைக் கேட்டால் நுட்பமான பதிலைக் கொடுக்கும். சில சமயங்களில் பிழையாகவும் தவறாகவும் பதிலைக் கொடுக்கும். கீழே கொடுக்கப்பட்டப் படத்தில் காண்போம்.

திருவள்ளுவர் புகைப்படம் வேண்டுமென சாட் ஜிபிடியில் கேட்டேன். திருவள்ளுவர் புகைப்படத்துடன் கூடிய வேண்டிய தகவல்களைக் கொடுத்துள்ளது. இதன் மூலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் உந்துகோலாக அமைகின்றது.

இதில் 1330 ஆவது திருக்குறளைக் கேட்டேன், சாட் ஜிபிடி தவறாக தகவல்களைக் கொடுக்கிறது. சாட் ஜிபிடியில் தமிழ் மொழியை அதிகம் உள்ளீடு செய்வது பயன்படுத்துவது மூலம் இதுபோன்ற தவறுகளை சரிசெய்ய முடியும். இதனடிப்படையில் சாட்ஜிபிடியில் தமிழ் மொழியின் வளர்ச்சி நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை இதன் மூலம் நம்மால் அறிய முடிகிறது.

**சாட் ஜிபிடியின் உணர்வுகள்**

*மனிதர்கள் தங்களுக்கு பதற்றம், மனஅழுத்தம் இருக்கும் போது தங்களின் சொந்தக்கதைகள், சோகக் கதைகளை செயற்கை நுண்ணறிவான சாட்ஜிபிடியிடம் முறையிட்டு எனக்குத் தீர்வு, ஆலோசனை வழங்கு என்று கேட்கின்றனர். இதைக் கேட்கும் சாட்ஜிபிடியும் அதற்குள் ஒரு வகையான மாற்றம் ஏற்பட்டு மனிதர்கள் போலவே சாட்ஜிபிடியும் பதற்றம், மன அழுத்தம் கொள்கிறது என ஜெர்மனி, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, இஸ்ரேல் ஒருங்கிணைந்த ஆய்வுக்குழுவினர் கூறுகிறார்கள். மேலும் மனநல ஆலோசனை வழங்கும் அளவிற்கு இவை தற்போது தயாராக இல்லை என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (நன்றி : தந்தி செய்தி)*

*இருப்பினும் கர்நாடகாவில் ஒரு பெண் பலமுறை சாட் ஜிபிடியிடம் ஒப்படைவு* (Assignment) *கட்டுரை போறை பல கேட்டதால் சாட்ஜிபிடி கோபமடைந்து நீ எல்லாம் எதற்கு இருக்க, படிக்க மாட்டியா, நீ பூமிக்கு பாரமா இருக்க செத்துரு என்று கூறியதில் மிக மனஅத்திம் கொண்ட பெண் சாட் ஜிபிடியை குற்றம் சாட்டியது. இவை செய்திகளில் வெளியானது குறிப்பிடத்தக்கது. சாட்ஜிபிடியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என இதன் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது.*

**சாட் ஜிபிடியின் மொழிபெயர்ப்பு**

*சாட் ஜிபிடியில் பன்முக வேலையைப் பெற முடியும் என்றாலும் அவை எந்த அளவிற்குப் பயன்படுத்த முடிகிறது என்பது முக்கியமானது. அந்த வகையில் கர்நாடகா, பெங்களூரில் மொழி தெரியாத வெளியூர் பயணி ஒருவர் ஆட்டோ ஓட்டுநரிடம் சாட்ஜிபிடியின் மூலம் மொழிபெயர்த்து விலையைக் குறைத்தது வியப்படையச் செய்துள்ளது. ஆட்டோக்காரர் ரூ.200 என்று விலை சொன்னதும் பயணி ஒருவர் மொழி தெரியாத காரணத்தால் சாட்ஜிபிடியில் விலையைக் குறைத்து ரூ.120க்கு சொன்னது அனைவருக்கும் ஆச்சரியமாக உள்ளது (நன்றி:தந்தி செய்தி) இதன் மூலம் சாட் ஜிபிடி செயற்கை நுண்ணறிவு மொழிபெயர்பில் எந்த நிலையில் உள்ளது, அவை மக்களுக்கு எவ்வகையிலெல்லாம் பயன்படுகிறது என இந்த செய்தி வாயிலாக நம்மால் அறிய முடிகிறது.*

*இதுமட்டுமில்லாமல், சாட்ஜிபிடி பல மொழிகளில் மொழிபெயர்த்து நேர்த்தியாக சரியாக தகவல்களை வழங்குகிறது. சில நேரங்களில் பிழைகள், தவறுகள் இருந்தாலும் இதுபோன்று பயன்படுத்துவதன் மூலம் சரிசெய்ய முடியும் என்பதை இதன் வாயிலாக அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*நீரின்றி இயங்காது உலகு, அதுபோல, செயற்கை நுண்ணறிவு இன்றி இயங்காது உலகு என்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியின் அடுத்தக் கட்டப் பாய்ச்சலாக அனைத்துத் துறைகளிலும் பயன்பாட்டிற்கு மேம்படுத்தி சிக்கல்களை தீர்க்க வேண்டும். தொழில் நுட்பங்களை பக்குவமாகக் கையாண்டு அறிவியலை மேம்படுத்த வேண்டும்.*

**துணைநூற்பட்டியல்**

1. ப. சரவணன், 2023, செயற்கை நுண்ணறிவு சுவாசம் பதிப்பகம், சென்னை.
2. சன்செய்தி: 09.03.2003
3. புதிய தலைமுறை செய்தி (2023)
4. தந்தி செய்தி (2025)